# குழித்துறை நகராட்சி

குழித்துறை நகர்மன்றத்தின் **அவசரக்கூட்டம் 29-08-2024 வியாழக்கிழமை மாலை 3.00** மணிக்கு நடைபெற்ற கூட்டத்தின் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

நகர் மன்ற தலைவர் திரு.பொன். ஆசைத்தம்பி அவர்கள் கொண்டு வரும் தீர்மானங்கள்

1) மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரிக்கு பின்புறம் உள்ள அறநிலைய துறைக்கு சொந்தமான இடத்தில் மினி ஸ்டேடியம் அமைக்க தமிழக அரசை கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

மன்றத்தீர்மான எண்.970 தீர்மானிக்கப்பட்டது

பொருள் எண்.1

குழித்துறை நகராட்சி மார்த்தாண்டம் நவீன காய்கறி சந்தை கட்டுமான பணி மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்ட கடைகளுக்கு கீழ்கண்ட விபரப்படி வைப்புத்தொகை திரும்ப கேட்ட வண்ணம் வரப்பெற்ற கடைத்தாரர் விபரம் கீழ்கண்டவாறு..

| வரிசை எண் | பெயர் | கடை எண் |
|---|---|---|
| 1 | திரு.ஆர். பத்மகுமார் | கருங்கல் சாலை கடை எண்.5 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மனு அன்னார் செலுத்திய வைப்புத்தொகையினை கணக்கீடு செய்து திரும்ப வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3066/2021/அ2)

மன்றத்தீர்மான எண்.971 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.2

குழித்துறை நகராட்சியில் NUHM 2022-2023 திட்டத்தின் கீழ் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. தற்பொழுது கட்டிடம் கட்டப்படும் இடத்தின் மண் பரிசோதனைக்கு ஏற்ப கட்டிடம் கட்டுமானம் (structural design) முதல்வர் திருநெல்வேலி அரசு தொழில்நுட்ப கல்லூரி அவர்களிடம் பெறப்பட்டு மேற்கொண்டதனால் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்ட கீழ்கண்ட இனங்கள் M20 Concrete, steel fabrication, brick work, plastering CM 1:5 கூடுதலாக செய்யப்பட்டது. மேலும் உதவி இயக்குநர் மக்கள் நல்வாழ்வு துறை நாகர்கோவில் அவர்களின் ஆலோசனைபடி ஒவ்வொரு அறையிலும் கூடுதலாக மின்சார வசதி( electrical power)செய்யவும், EWC toilet அமைக்கவும் அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட பணிகள் கூடுதலாக செய்யப்பட்டதால் மதிப்பீட்டில் வழிவகை செய்யப்பட்ட கீழ்கண்ட இனங்கள் colour washing with plastic emulsion paint, septic tank, UPVC ஜன்னல்கள், AC ceiling fan செய்யப்படவில்லை. எனவே மேற்கண்ட கூடுதல் பணிகள் மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.9,70,000 (ரூபாய் ஒன்பது

இலட்சத்து எழுபதாயிரம் மட்டும்) ஆகும். தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.**1753/2024/இ1

மன்றத்தீர்மான எண்.972 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.3

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 1 முதல் 10 வரை உள்ள பகுதிகளில் வசிக்கும நகர மக்களுக்கு நகராட்சியில் உள்ள ஆறு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து (குழித்துறை மண்டலம்) பகிர்மான குழாய் மூலம் வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குழாய்(distribution main) நீர்தேக்க தொட்டிகளுக்கு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து (pumping main) மூலம் தண்ணீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள், sluice valve,air valve மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வீணாகாதவாறு பொது மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.6.00 இலட்சம் (ஆறு இலட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.**1751/2024/இ1

மன்றத்தீர்மான எண்.973 அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.4

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 11 முதல் 21 வரை உள்ள பகுதிகளில் வசிக்கும நகர மக்களுக்கு நகராட்சியில் உள்ள ஆறு மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளிலிருந்து (குழித்துறை மண்டலம்) பகிர்மான குழாய் மூலம் வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யப்படும் பிரதான குழாய் (distribution main) நீர்தேக்க தொட்டிகளுக்கு சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து( pumping main) மூலம் தண்ணீர் ஏற்றப்படுகிறது. மேலும் பிரதான குழாய்கள் மற்றும் விநியோக குழாய்கள், sluice valve,air valve மற்றும் பொது குழாய்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து குடிநீர் வீணாகாதவாறு பொது மக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வருடாந்திர பராமரிப்பு பணிக்கு ரூ.6.00 இலட்சம் (ஆறு இலட்சம்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண்.**1752/2024/இ1

மன்றத்தீர்மான எண்.974 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.5</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2-ல் ராஜீவ் நக முதல் மேலகுழிவிளாகம் செல்லும் சாலை (Unicode 149002L002) மேம்பாடு செய்ய நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIP 2024-2025) திட்டத்தின்கீழ் தேர்வு செய்யப்பட்டு பணி துவக்கும் நிலையில் உள்ளது. தற்பொழுது பெய்து வரும் மழையின் காரணமாக சாலையின் ஒரு பகுதியில் மண் சரிந்து புதியதாக சாலை அமைக்க முடியாததால் மேற்கண்ட இடத்தில் தடுப்பு சுவர் கட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1,60,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1750/2024/இ1

மன்றத்தீர்மான எண்.975 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கருங்கல் சாலையில் அமைந்துள்ள பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் நலன் மற்றும் பாதுகாப்பு கருதி ஒலிபெருக்கி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.83,000/- (ரூபாய் எண்பத்தி மூன்றாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு:-</u> மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1771/2024/இ1

மன்றத்தீர்மான எண்.976 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.7</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.4 இடைவிளாகம் பகுதியில் உள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் வசதி செய்துதர பகிர்மான குழாய் அமைக்க வேண்டி உத்தேச மதிப்பீடு ரூ.65,000/- (ரூபாய் அறுபத்து ஐந்தாயிரம் மட்டும்) தயாரிக்கப்பட்டுள்ளது. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.கு:-</u> மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.1772/2024/இ1
மன்றத்தீர்மான எண்.977 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.8</u>

குழித்துறை நகராட்சியில் சாலை பதிவேடு (Road Ledger)-ல் திருத்தங்கள் செய்ய தனியார் நிறுவனம் மூலம் ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மானம் எண்.669, நாள் 31-10-2023-ல் மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட பணி மேற்கொள்ள 21-08-2024 அன்று விலைப்புள்ளி வரப்பெறப்பட்டது கீழ்கண்டவாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | AMS Soft solution Municipal Colony, ERODE | 2.04% மதிப்பீட்டை விட |
| 2 | DB Info solution Saidapet, Chennai | மதிப்பீட்டை விலை விகிதம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த விலைப்புள்ளியாக மதிப்பீட்டு விலை விகிதத்தில் கொடுத்துள்ள DB Info solution அவர்களின் விலைப்புள்ளி ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.2797/2023/இ1.

மன்றத்தீர்மான எண்.978 அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.9</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.20-ல் ராணி ஸ்டோர் முதல் ஆர்.சி.தெரு-1 (Unicode 149020L076) சாலையில் உள்ள மழைநீர் வடிகால் அமைத்திட ரூ.3.20 இலட்சம் மதிப்பீட்டில் நகர்மன்ற தீர்மானம் எண்.926, நாள் 08-07-2024-ன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-08-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்வருமாறு.

| வ. எண். | பெயர் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயசந்திரன் | 0.12% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.P. ஜெயபிரகாஷ் | 0.28% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0.12% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு.:- மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.1363/2024/இ1.

மன்றத்தீர்மான எண்.979 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.10

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15-ல் அட்டகுளம் சந்திப்பில் மழைநீர் வடிகால் கீழ்புறத்தில் cover slab மற்றும் handrail அமைக்கும் பணிக்கு ரூ.1.40 இலட்சத்திற்கு மன்ற தீர்மான எண்.930, நாள் 08-07-2024-ல் மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டு 27-08-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயசிங் | 0.43% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு. ஸ்டீபன் | 5.27% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0,43% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்:1358/2024/E1

மன்றத்தீர்மான எண்.980 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.11

குழித்துறை நகராட்சி வார்டு எண்.15-ல் வர்த்தக சங்கம் சாலை (Unicode:149015L060) பேவர் பிளாக் சாலையாக மாற்றி அமைக்க ரூ.2.60 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மான எண்.922, நாள் 08-07-2024-ல் ஒப்புதல் பெறப்பட்டது. 27-08-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயபிரகாஷ் | 0.17% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு. ஜெயசந்திரன் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0,03% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண்:161/2024/E1
மன்றத்தீர்மான எண்.981 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.12

குழித்துறை நகராட்சி வார்டு எண்.8-ல் மேட்டுகிராமம் இசக்கியம்மன் கோவில் அருகில் மழைநீர் வடிகால் அமைக்க ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மான எண்.896, நாள் 13-06-2024-லன்படி மன்ற ஒப்புதல் பெறப்பட்டு 27-08-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஆன்றணி | 0.57% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு.சி. ராஜன் | 0.08% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0,08% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்**:1100/2024/E1

மன்றத்தீர்மான எண்.982 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.13</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.16-ல் கொடுங்குளம் சாலையில் கோடியவிளை சாலை சந்திப்பிலிருந்து நகராட்சி எல்லை முடியும் வரை (கொடுங்குளம் subroad) மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மான எண்.924, நாள் 08-07-2024-ல் மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டு 27-08-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஆன்றணி | 0.02% மதிப்பீட்டை விட குறைவு |
| 2 | திரு.சி. ராஜன் | 1.67% மதிப்பீட்டை விட அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0,02% குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு :- மன்றம் அனுமதிக்கலாம்
**ந.க.எண்**:1359/2024/E1

மன்றத்தீர்மான எண்.983 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

<u>பொருள் எண்.14</u>

குழித்துறை நகராட்சி வார்டு எண்.14 வடக்கு தெரு Zion church சாலை (Unicode: 149014R068) சாலையில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு ரூ.4.80 இலட்சம் மதிப்பீட்டில் மன்ற தீர்மான எண்.927, நாள் 08-07-2024-ன்படி மன்ற ஒப்புதல் அளிக்கப்பட்டு 27-08-2024 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதின் விவரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் | விழுக்காடு |
|---|---|---|
| 1 | திரு. ஜெயசந்திரன் | 3.41% மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திரு. ஸ்டீபன் | 0.06% மதிப்பீட்டை விட குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியாக மதிப்பீட்டை விட 0,06% குறைவாக கொடுத்துள்ளார். எனவே குறைவான ஒப்பந்தப்புள்ளியினை ஏற்பது குறித்து மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு:- மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்**:1356/2024/E1

மன்றத்தீர்மான எண்.984 குறைந்த ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

பொருள் எண்.15

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனங்களுக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 22-07-2024-ல் கோரப்பட்டதில் ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே பெறப்பட்டுள்ளது.

1) மார்த்தாண்டம் லாறிப்பேட்டை தற்காலிக கடை எண்.42

| வ. எண் | பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. றசல்ராஜ், விரிகோடு | 4100 |
| 2 | திரு.பி. கிங்ஸ்லி, மார்த்தாண்டம் | 4050 |

. 2) மார்த்தாண்டம் லாறிப்பேட்டை தற்காலிக கடை எண்.43

| வ. எண் | பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | திரு. டேவிட்ராஜ், மடிச்சல் | 4050 |
| 2 | திரு. ராஜன், மடிச்சல் | 4100 |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.। மற்றும் 2-ல் காணும் கூடுதல் ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு உரிமம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

அ.கு. மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**ந.க.எண்**.3066/2021/அ2

மன்றத்தீர்மான எண்.985 (1) கூடுதல் ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது
(2) கூடுதல் ஒப்பந்தப்புள்ளி அனுமதிக்கப்பட்டது

ஒப்பம்/- திரு.பொன். ஆசைத்தம்பி,
நகர் மன்றத்தலைவர்,
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல்/

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.